## பட்டிப் பொங்கலில் பாரம்பரியப் படையல்…

## 25.01.2014

மாட்டுப் பொங்கல் படையலில் தினை அரிசி சாதம், தட்டைப் பயிறுக் கூட்டு ஆகியவற்றோடு அவசியம் இடம்பெறும் உணவு வகை… ‘அரசாணிப்பொரியல்’. விவசாயம் சாராதவர்கள் கூட, பொங்கல் பண்டிகைக்கு கரும்பு, மஞ்சள் கொத்து ஆகியவற்றோடு அரசாணிக் காயையும் (பரங்கிக்காய்) பொங்கல் சந்தைகளில் வாங்குவார்கள். அதனால், பொங்கல் சமயத்தில் இதன் தேவை அதிகம் இருக்கும். அதனால் விவசாயிகள் பலர், பொங்கல் சமயத்தில் அறுவடைக்கு வருவது போல எருக்குழிப் பயிராக அரசாணியை விதைத்து சாகுபடி செய்வார்கள். அவர்களில் ஒருவராக, கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் பகுதியைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி, வீட்டுக்கு அருகில் அரசாணிப் பயிரை வளர்த்து வருகிறார்!

**தேவை அதிகம்!**

பச்சையும் மஞ்சளும் கலந்த முற்றிய அரசாணிக்காய்கள் படர்ந்து கிடந்த இடத்தில் நின்றபடி பரவசமாகப்பேசினார், சுந்தரமூர்த்தி.

“ நான் வாழை விவசாயம் செஞ்சுட்டு இருக்கேன். பொங்கல் தேவைக்காக எப்பவும் அரசாணிக்காய் விதைப்பேன். இது நாட்டு ரகக்காய். நல்ல நீர்ச்சத்து உள்ள காய். அதனால, இதைப் பல நோய்களுக்காக மருத்துவர்கள் சாப்பிட சொல்றாங்க. அப்பிடி இதுக்கு நல்ல தேவையும் இருக்கறதால பல பேர் ஏக்கர் கணக்குல சாகுபடி பண்றாங்க. நம்மள மாதிரி ஆளுங்க, பொங்கல் படையலுக்கு வேண்டி வரப்பு, வாய்க்கால், பொழிக்கால்னு விதைச்சு எடுத்துக்குவாங்க. ஆடி மாச வாக்குல விதைகளை விதைச்சு விட்டோம்னா, மழையை வெச்சே ‘ஜம்’முனு வளர்ந்துடும். மார்கழி மாசத்துல இருந்து மாசி வரைக்கும் காய் பறிக்கலாம். இதுல குட்டி நாதஸ்வரம் மாதிரி மஞ்சள் கலர்ல பூபூக்கும். அந்தப் பூவைத்தான் மார்கழி மாசத்துல கோலம் போட்டு சாணிப் புள்ளையார் பிடுச்சு செருகி வைப்பாங்க. தை மாசத்துல அதிகளவுல காய் காய்க்கும்” என்று சிலாகித்துச் சொன்ன சுந்தரமூர்த்தி, தொடர்ந்தார்.
“ வீட்டுத்தேவைக்குப் போக மிச்சம் இருக்குறதை சந்தைக்குக் கொண்டு போனா … வித்து தீந்துடும். நாட்டு ரகம்கிறதால விதையை எடுத்து வெச்சு அடுத்த வருஷத்துக்கு விதைச்சுக்கலாம். நல்ல திடமா இருக்கிற ஒரு காயைப் பறிக்காம கொடியிலயே விட்டுட்டா அது நல்லா பழுத்து, முத்தி பழுப்பு கலருக்கு மாறிடும். அதை அறுத்து உள்ள இருக்குற சதைப்பகுதியை மட்டும் எடுத்து தண்ணியில அலசுனா… விதை எல்லாம் தனியா பிரிஞ்சுடும். அதை எடுத்து சாம்பல்ல புரட்டி, நிழல்ல காய வெச்சு சுத்தமான துணியில முடிஞ்சு கட்டி தொங்க விட்டா… பத்திரமா இருக்கும்.

வரப்பு வெள்ளாமையா பண்றப்போ 6 அடி இடைவெளியில லேசா குழி பறிச்சு குழிக்கு ரெண்டு விதைனு விதைக்கலாம். நான், தீவனப்பயிர் பாத்தி ஓரத்துல விதைச்சதால தண்ணி உரம்னு எதையும் கொடுக்கல. தீவன வயல்ல போடுற உரமே இதுக்குப் போதுமானதா இருக்குது. நாட்டு ரகமா இருந்தாலும், பிஞ்சுப்பருவத்துல சாறு உறிஞ்சும் பூச்சியும், காய்ப்பருவத்துல காய்ப்புழு, பொறி வண்டும் வருது. அதனால, பூ வைக்கும்போது; பிஞ்சு வைக்கும்போது; காயாப் பெருக்கும்போதுனு மூணு தடவை முன்கூட்டியே அரப்பு மோர் கரைசலைத் தெளிச்சு விட்டுட்டா… எதுவும் வராது. பழுதில்லாம காயை அறுவடை பண்ணிடலாம்”

என்ற சுந்தரமூர்த்தி, "முன்னயெல்லாம் வீட்டுக்கூரையில இந்தக் கொடியைப் படர விட்டுடுவாங்க. இப்போ மாடி வீடுங்கறதால அதெல்லாம் மாறிப்போச்சு" என்றார் பெருமூச்சு விட்டவராக!

**வீரிய ரகத்தில் எட்டு டன் மகசூல்!**

அரசாணி விவசாயத்துடன் அரசாணி விற்பனை மண்டியையும் நடத்தி வருகிறார், காரமடைப் பகுதியைச் சேர்ந்த செந்தில்குமார் அவரிடம் பேசிய போது, " ஒரு காலத்துல எருக்குழிப் பயிரா இருந்த அரசாணியை, இப்ப ஏக்கர் கணக்குல விதைக்க ஆரம்பிச்சுட்டாங்க. ஊட்டி கேரளாவுல இதுக்குக் கிராக்கி அதிகரிச்சுப் போச்சு. அதனால வீரிய ரகமெல்லாம் வந்துடுச்சு. ஏக்கருக்கு எட்டு டன் வரை மகசூல் கொடுக்கற வீரிய ரகம் கூட இருக்கு. இதைத்தான் பெரும்பாலும் விதைக்கிறாங்க. வீரிய ரகத்துக்குப் பட்டம் கிடையாதுங்கிறதால, வருஷம் முழுசும் வருமானம் பாக்கலாம். உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம், காரமடை, மேட்டுப்பாளையம், தொண்டாமுத்தூர் பக்கமெல்லாம் அதிகளவுல அரசாணி சாகுபடி பண்றாங்க.

**இயற்கை முறை சாகுபடி!**

பெரும்பாலும் ரசாயன உரங்களை, இதுக்கு அதிகமா கொடுக்கறதில்லை. தொழுவுரம், ஆட்டு எரு ரெண்டையும் தான் கொடுக்கறாங்க. பெருசா நோய் எதுவும் தாக்காது. எப்பவுமே கிலோ 5 ரூபாய் அளவுக்கு விற்பனையாகுது. பொங்கல் சமயத்துல கொஞ்சம் கூடுதல் விலை கிடைக்கும். கேரளா, ஊட்டி, கோயம்புத்தூர், திருப்பூர், ஒட்டன்சத்திரம்னு தினமும் 5 டன் அளவுக்கு அரசாணிக்காயை அனுப்பிட்டிருக்கேன்" என்ற செந்தில்குமார், நிறைவாக, "இதுக்கு மத்த காய்கறி அளவுக்கு பரபரப்பான விற்பனை இல்லாட்டியும் தேவை இருந்துட்டே தான் இருக்கும். ஒரு ஏக்கர் சாகுபடி செய்ய அதிகபட்சம் 10 ஆயிரம் ரூபாய் செலவாகும். பெரிய பராமரிப்பும் கிடையாது. 8 டன் அறுவடை செய்தா... 40 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். செலவு போக 90 நாள்ல 30 ஆயிரம் ரூபாய் லாபம்" என்று சொன்னார்.

**இப்படித் தான் சாகுபடி செய்யணும்!**

செந்தில்குமார் சொல்லும் அரசாணி சாகுபடி முறை - அரசாணி, 90 நாள் பயிர். இது அனைத்து மண்ணிலும் சிறப்பாக வளரும். வீரிய ரக அரசாணியை அனைத்துப் பட்டங்களிலும் விதைக்கலாம். சாகுபடி நிலத்தை மண் புழுதியாகும் அளவுக்கு உழுது, செழிம்பாக தொழுவுரம் அல்லது ஆட்டு எருவை இறைத்து... 6 அடி அளவு பார்களை அமைத்துக் கொள்ள வேண்டும். பாரில் 6 அடி இடைவெளியில் கையால் குழி பறித்து, குழிக்கு இரண்டு விதை என்ற கணக்கில் விதைக்க வேண்டும். ஏக்கருக்கு 250 கிராம் விதை தேவைப்படும். மண்ணின் ஈரத்தன்மையைப் பொருத்து, தேவையான அளவுக்குப் பாசனம் செய்ய வேண்டும். செடிகளில் வாட்டம் தெரிந்தால்... ஏதாவது இடுபொருள் கொடுக்கலாம். கொடி படரத்தொடங்கும் சமயத்தில், நிலத்தில் உள்ள களைகளை அகற்ற வேண்டும். பூச்சிகள் தென்பட்டால்... மூலிகைப்பூச்சி விரட்டி தெளிக்கலாம். வேறு எந்த விதப் பராமரிப்பும் தேவையில்லை. மூன்று மாதத்தில் அறுவடை.

**அரப்பு மோர்க்கரைசல்!**

ஒரு கிலோ அளவு அரப்பு இலையை நன்றாக இடித்து, பாத்திரத்தில் இட்டு மூழ்கும் அளவுக்கு நன்கு புளித்த பசு மோரை ஊற்றி... 15 நாட்கள் நிழலில் வைத்து, தினமும் காலை மாலை இரண்டு வேளைகளும் கலக்க வேண்டும். பிறகு இளம்பச்சை நிறக்கரைசலாக மாறி வரும்போது, சுத்தமான துணியால் வடிகட்டினால் அரப்பு மோர்க் கரைசல் தயார்.

100 மில்லி அரப்ப மோர்க்கரைசல், 100 மில்லி தேங்காய்ப்பால், 100 மில்லி இளநீர், 50 கிராம் நாட்டுச் சர்க்கரை ஆகியவற்றை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து, அதிகாலை அல்லது அந்தி மாலை நேரத்தில், அரசாணிக்கொடி மீது புகை போல தெளிக்க வேண்டும். இது ஒரு டேங்க் தெளிப்பதற்கான அளவு.

**தொடர்புக்கு, சுந்தரமூர்த்தி, செல்போன் : 98422- 62783.**

**செந்தில்குமார், செல்போன் : 98422-72192.**

**ஆதாரம் : பசுமை விகடன்**

**வெளியீடு : 25.01.14**

**www.vikatan.com**